நான்காவது

# மரப்பெயர்த் தொகுதி

நான்காவது

# மரப்பெயர்த் தொகுதி

### 628. பஞ்ச தருவின் பெயர்

சந்தானம், தேவ தாரம், (தருக்) கற்பகம்.
மந்தாரம், பாரிசாதம், அவற்றின் வருக்கம்.

**பஞ்ச தருவின் பெயர் (5)**

1. சந்தானம், 2. தேவதாரம், 3. கற்பகம், 4. மந்தாரம், 5. பாரிசாதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தருவின் வருக்கமாவன
4 தாருதருக் கற்பகம், சுரர்தரு கற்பகம்

இதனை இருவேறு தலைப்பில் இருநூற்பாக்களாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. அவை வருமாறு:

கற்பகத் தருவின் பெயர்:
சந்தானந் தேவ தாரந் தருக்கற்பகம்.
அவற்றின் வருக்கத்தின் பெயர்:
மந்தாரம் பாரிசாத மவற்றின் வருக்கம். (1)

### 629. சந்தனத்தின் பெயர்

சாந்தம், மலயம், சந்திரதிலகம்,
(ஏய்ந்த) ஆரம், சந்து, இவை சந்தனம்.

**சந்தனத்தின் பெயர் (5)**

1. சாந்தம், 2. மலயம், 3. சந்திரதிலகம், 4. ஆரம், 5. சந்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 திலதம் (2)

### 630. அகிலின் பெயர்

அகருவும், பூழிலும், அகில் என அறைவர்;
(பகரின்) காக துண்டமும் ஆகும்.

**அகிலின் பெயர் (3)**

1. அகரு, 2. பூழிச், 3. காகதுண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 துண்டமு மென்ப, துண்டமு மதற்கே. (3)

### 631. மராமரத்தின் பெயர்

சாலம், மராமரம்.

**மராமரத்தின் பெயர் (1)**

1. சாலம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சாலமரத்தின் பெயர் (4)

### 632. ஆச்சாவின் பெயர்

ஆவே, ஆச்சா.

**ஆச்சாவின் பெயர் (1)**

1. ஆ.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆச்சாமரத்தின் பெயர்
மராமரத்துக்கும் ஆச்சாமரத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 631, 632-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.
'ஆச்சாமரத்தின் பெயர்' என்னும் தலைப்பில் 631, 632 இரண்டையும் ஒரே நூற்பாவாக அச்சுப்பிரதி தருகிறது. (5)

### 633. மகிழமரத்தின் பெயர்

வகுளம், இலஞ்சி, மகிழமரம் என்ப.

**மகிழமரத்தின் பெயர் (2)**

1. வகுளம், 2. இலஞ்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 மகிழ்மரம் என்ப, மகிழென வைப்பர். (6)

### 634. தேக்கின் பெயர்

சாதி, தேக்கே.



**தேக்கின் பெயர் (1)**

1. சாதி. (7)

### 635. செண்பகத்தின் பெயர்

சண்பகம், செண்பகம்.

**செண்பகத்தின் பெயர் (1)**

1. சண்பகம்;

பாடவேறுபாடு—விளக்கம்

சம்பகஞ் சண்பகம்-அச்சுப்பிரதி.

'தேக்குக்கும் செண்பகத்துக்கும் பெயர்'

என்னும் தலைப்பில் 634-635-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (8)

### 636. ஆலின் பெயர்

ஆதவம், கான்மரம், வடமரம், தொன்மரம்,
(ஓதிய) பழுமரம், கோளி, ஆலே.

**ஆலின் பெயர் (6)**

1. ஆதவம், 2. கான்மரம், 3. வடமரம், 4. தொன்மரம், 5. பழுமரம், 6. கோளி,

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 பூதவங் காமரம் (9)

### 637. அரசின் பெயர்

கணவம், பணையே, மராமரம், போதி,
அச்சு வத்தம், பிப்பிலம், அரசே.

**அரசின் பெயர் (6)**

1. கணவம், 2. பணை, 3. மராமரம், 4. போதி, 5. அச்சுவத்தம், 6. பிப்பிலம். (10)

### 638. அசோகின் பெயர்

பிண்டி, செயலை, காகோளி, அசோகே.

அசோகின் பெயர் (3)

1. பிண்டி, 2. செயலை, 3. காகோளி.

பாடவேறுபாடு—விளக்கம்

3. காகொளி

(11)

## 639. இரத்தியின் பெயர்

இரத்தி, இறலி.

இரத்தியின் பெயர் (1)

1. இறலி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இத்தியின் பெயர்

(12)

## 640 மருதின் பெயர்

அருச்சுனம், மருதே.

மருதின் பெயர் (1)

1. அருச்சுனம்.

பாடவேறுபாடு—விளக்கம்

அரிச்சுனம் மருதாம்.

'இரத்தியின் பெயர்' 'மருதின் பெயர்' என்னும் தலைப்பில் 639-640-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

(13)

## 641. கொன்றையின் பெயர்

இதழி, கடுக்கை, ஆரக்குவதம் கொன்றை.

கொன்றையின் பெயர் (3)

1, இதழி, 2. கடுக்கை, 3. ஆரக்குவதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இத்தியின் பெயர்

3 ஆர்க்குவதம்

இதனை அடுத்து வஞ்சியின் பெயர் என்னும் தலைப்பில், 'வானீரம் வஞ்சுளம் வஞ்சி யாகும்' என ஒரு நூற்பா காணப்படுகிறது. இது சில பிரதிகளில் இல்லை.

(14)



## 642. குராவின் பெயர்

கோட்டம், குடிலம், குரா எனக் கூறுவர்.

குராவின் பெயர் (2)

1. கோட்டம், 2. குடிலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குராமரத்தின் பெயர், கோட்டத்தின் பெயர், குடவின் பெயர்

(15)

## 643. நாவலின் பெயர்

சம்பு, நாவல்.

நாவலின் பெயர் (1)

1. சம்பு.

(16)

## 644 வேம்பின் பெயர்

நிட்பம், வேம்பே.

வேம்பின் பெயர் (1)

1. நிம்பம்.

பாடவேறுபாடு—விளக்கம்

'நாவலுக்கும் வேம்புக்கும் பெயர்' என்னும் தலைப்பில் 643 644-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

(17)

## 645. அத்தியின் பெயர்

அதவும், உதும்பரமும், அத்தி ஆகும்.

அத்தியின் பெயர் (2)

1. அத, 2. உதும்பரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 அதவுதும்பரம், 2. உதம்பரம்.

(18)

## 646. புளிமாவின் பெயர்

ஆம்பிரம், சூதம், மாழை, புளிமா.

புளிமாவின் பெயர் (3)

1. ஆம்பிரம், 2. சூதம், 3. மாழை

(19)

### 647. தேமாவின் பெயர்

சூதம், சேகரம், ஆம்பிரம், கொக்கே
தீதுஇல் மரத்துஇவை தேமா ஆகும்.

**தேமாவின் பெயர் (4)**

1. சூதம். 2. சேகரம், 3, ஆம்பிரம், 4. கொக்கு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2-4 சேதார மாமரங் கொக்கென
2 : 2 மாத்திவை, 4. பெயரே. (20)

### 648. இருப்பையின் பெயர்

மதூகம், இருப்பை எனவகுத் தனரே.

**இருப்பையின் பெயர் (1)**

மதூகம் (21)

### 649. செருந்தியின் பெயர்

பஞ்சரம், செங்கோடு, செருந்திஎனப் பகர்வர்.

**செருந்தியின் பெயர் (2)**

1. பஞ்சரம், 2. செங்கோடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 செருந்தி யாகும். (22)

### 650. கோங்கின் பெயர்

குயா, சூ டிணர், கன்னிகாரம், கோங்கே

**கோங்கின் பெயர் (3)**

1. குயா, 2. சூடிணர், 3. கன்னிகாரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

துருமோற் பலங்கன்னி காரங் கோங்கே - அச்சுப்பிரதி.
ஞாழல் துருமோர் பலங்கன்னி காரம்
பவனி பிணரிவ் வைந்துங் கோங்கே-ஏற்பதிப்புக்கள். (23)

### 651. பச்சிலை மரத்தின் பெயர்

பசும்படி, தமாலம், பச்சிலை ஆகும்.



**பச்சிலை மரத்தின் பெயர் (2)**

1. பசும்பிடி, 2. தமாலம்.

**பாடவேறுபாடு— விளக்கம்**

தலைப்பு : பச்சிலையின் பெயர். (24)

### 652. வன்னியின் பெயர்

கலிகம், சமியே, குலிசம், வன்னி.

**வன்னியின் பெயர் (3)**

1. கலிகம், 2. சமி, 3. குலிசம். (25)

### 653. கருங்காலியின் பெயர்

கதிரம், கருங்காலி

**கருங்காலியின் பெயர் (1)**

கதிரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. கதிரங், காதிரங், கருரங் (26)

### 654. எட்டியின் பெயர்

காஞ்சிரை, எட்டி.

**எட்டியின் பெயர் (1)**

காஞ்சிரை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : காஞ்சிரையின் பெயர்.
காஞ்சிரம்
கருங்காலிக்கும் எட்டிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 653, 654-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (27)

### 655. செங்கருங்காலியின் பெயர்

சிறுமா ரோடம், செங்கருங் காலி.

**செங்கருங்காலியின் பெயர் (1)**

சிறுமாரோடம்

(28)

## 656. புன்னையின் பெயர்

புன்னை, புன்னாகம்.

**புன்னையின் பெயர் (1)**

புன்னாகம்

(29)

## 657. சுரபுன்னையின் பெயர்

வழை, சுர புன்னை

**சுரபுன்னையின் பெயர் (1)**

வழை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

புன்னைக்கும் சுரபுன்னைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 656, 657-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

(30)

## 658. புனமுருங்கையின் பெயர்

புன்குஎன் கிளவி புனமுருங்கைப் பெயரே.

**புனமுருங்கையின் பெயர் (1)**

புன்கு.

(31)

## 659. ஆத்தியின் பெயர்

ஆரே, தாதகி, ஆத்தி ஆகும்.

**ஆத்தியின் பெயர் (2)**

1. ஆர். 2. தாதகி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 ஆத்தியென் றாகும், ஆத்தம் ஆத்தி

(32)

## 660. மஞ்சாடி மரத்தின் பெயர்

திலகம், மஞ்சாடி



**மஞ்சாடி மரத்தின் பெயர் (1)**

திலகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மஞ்சாடியின் பெயர்
திலக மஞ்சாடி யாமெனச் செப்புவர்,

(33)

## 661. இலவ மரத்தின் பெயர்

இலவம், பொங்கர்.

**இலவ மரத்தின் பெயர் (1)**

1. பொங்கர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. பொங்கவம்

தலைப்பு: இலவன் பெயர்
இலவம் பொங்கர் சான்மலி யென்பர், சான்மலி
யாகும், இலவஞ் சான்மலி பொங் கரு மாகும். இலவஞ் சன்மலி; என வேறுபட்ட பாடங்கள் காணப்படுகின்றன. 'மஞ்சாடிக்கும் இலவமரத்துக்கும் பெயர்' என்னும் தலைப்பில் 660, 661-ஆம் நூற்பாக்கள். 'திலக மஞ்சாடி இலவஞ் சான்மலி' என ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகளில் காணப் படுகின்றது.

(34)

## 662. நெல்லியின் பெயர்

ஆமலகம், நெல்லி.

**நெல்லியின் பெயர் (1)**

1. ஆமலகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

'ஆமலகந் தாத்திரி நெல்லி' என்றும் பாடம்.

(35)

## 663. கடுமரத்தின் பெயர்

அரிதகி, கடுமரம்

**கடுமரத்தின் பெயர் (1)**

1. அரிதகி,

பாடவேறுபாடு—விளக்கம்

1. அரிதகம்

நெல்லிக்கும் கடுமரத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 662, 663-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (36)

## 664. புளியின் பெயர்

சிந்தம், சிந்தூரம், (சிறந்த) ஆம்பிலம்,
(வந்த) திந் துருணி, எகினம், புளியே.

**புளியின் பெயர் (5)**

1. சிந்தம், 2. சிந்தூரம், 3. ஆம்பிலம், 4. திந்துருணி, 5. எகினம்.

பாடவேறுபாடு—விளக்கம்

4. ஆமிலம், ஆம்பிரம் (37)

## 665. குருந்தின் பெயர்

குந்தம், குருந்தம்.

**குருந்தின் பெயர் (1)**

1. குந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 குருந்தே (38)

## 666. வெட்பாலையின் பெயர்

குடசம், வெட்பாலை.

**வெட்பாலையின் பெயர் (1)**

1. குடசம்.

பாடவேறுபாடு—விளக்கம்

குருந்துக்கும் வெட்பாலைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 665, 666-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாகவும் சிலர் கொள்வர். (39)

## 667. குமிழின் பெயர்

கூம்பல், கடம்பல், குமிழ்எனக் கூறுவர்



**குமிழின் பெயர் (2)**

1. கூம்பல், 2. கடம்பல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 கடமல் (40)

## 668. வேலமரத்தின் பெயர்

உடை, (குடை) வேலே.

**வேலமரத்தின் பெயர் (1)**

1. உடை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குடைவேல மரத்தின் பெயர்,
குடைவேலின் பெயர். (41)

## 669. பாதிரியின் பெயர்

பாடலம், பாதிரி.

**பாதிரியின் பெயர் (1)**

பாடலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பாதிரிமரத்தின் பெயர்.
'வேலமரத்துக்கும் பாதிரிக்கும் பெயர்' என்னும் தலைப்பில் 668, 669-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (42)

## 670. முருக்கின் பெயர்

கவிரே, கிஞ்சுகம், முருக்கு எனக் கருதுவர்.

**முருக்கின் பெயர் (2)**

1. கவிர், 2. கிஞ்சுகம். (43)

## 671. தேற்று மரத்தின் பெயர்

இல்லம், தேறு ஆம்.

**தேற்று மரத்தின் பெயர் (1)**

இல்லம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 தேறாகும், தேற்றாம், தேற்றா. (44)

## 672. விளாவின் பெயர்

வெள்ளில், விளா ஆம்.

**விளாவின்பெயர் (1)**

வெள்ளில்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தேற்றுக்கும் விளாவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 671, 672-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (45)

## 673. வில்லுவத்தின் பெயர்

கூவிளம், வில்லுவம், மாலூரம், கூவிளை.

**வில்லுவத்தின் பெயர் (3)**

1. கூவிளம், 2. மாலூரம், 3. கூவிளை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வில்வத்தின் பெயர்
கூவிள மாலூரங் கூவிளை வில்லுவம். (46)

## 674. வேங்கையின் பெயர்

திமிசும், திமிலும், கணியும், வேங்கை.

**வேங்கையின் பெயர் (3)**

1. திமிசு, 2. திமில், 3. கணி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வேங்கை மரத்தின் பெயர்.
2 தமாலும் (47)

## 675. கடம்பின் பெயர்

கதம்பம், விசாலம், நீபம், கடம்பே.

**கடம்பின் பெயர் (3)**

1. கதம்பம், 2. விசாலம், 3. நீபம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 கதம்பு (48)



## 676. வெண்கடம்பின் பெயர்

மராவே, வெண்கடம்பின் பெயர் ஆகும்மே.

**வெண்கடம்பின் பெயர் (1)**

1. மரா.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 பின்பெய ரென்ப, பெயரென வறைவர்
மராவெண் கடம்பின் பெயரென வகுப்பர். (49)

## 677. வருக்கைப் பலாவின் பெயர்

பனசம், வருக்கைப் பலா எனப் பகர்வர்.

**வருக்கைப் பலாவின் பெயர் (1)**

1. பனசம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: பலாவின் பெயர்.
பனசம் வருக்கை பலாவெனப் பகர்வர். (50)

## 678. ஈரப்பலாவின் பெயர்

ஆசினி, ஈரப்பலா ஆகும்மே.

**ஈரப்பலாவின் பெயர் (1)**

1. ஆசினி. (51)

## 679. அழிஞ்சிலின் பெயர்

அழிஞ்சில் சேமரம், அங்கோலம் ஆகும்.

**அழிஞ்சிலின் பெயர் (2)**

1. சேமரம், 2. அங்கோலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 செம்மரம் (52)

## 680. மாதுளையின் பெயர்

மாதுளம், கழுமுள் மாதுளை ஆகும்.

**மாதுளையின் பெயர் (2)**

1. மாதுளம், 2. கழுமுள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மாதளையின் பெயர்
3. மாதளை (53)

## 681. தாது மாதுளையின் பெயர்

தாடிமம், தாது மாதுளை ஆகும்.

**தாது மாதுளையின் பெயர் (1)**

1. தாடிமம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தாதுமாதளையின் பெயர்
1. தாதிமம், 3. மாதளை. (54)

## 682. எலுமிச்சின் பெயர்

சம்பீரம், முருகு, எலுமிச்சம் ஆகும்.

**எலுமிச்சின் பெயர் (2)**

1. சம்பீரம், 2. முருகு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : எலுமிச்சையின் பெயர்
2-3 முருநெலு மிச்சை
'சம்பீர முருகு சதாபல வெலுமிச்சு' என்றும் சில பிரதிகளில் பாடம். (55)

## 683. நாரத்தையின் பெயர்

நரந்தம், நாரத்தை ஆகும் என்ப,

**நாரத்தையின் பெயர் (1)**

1. நரந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நாரத்தின் பெயர்
1 நரந்தை, 3-4 நாம மாகும். (56)

## 684. குருக்கத்தியின் பெயர்

குருகே, மாதவி, குருக்கத்தி ஆகும்.



**குருக்கத்தின் பெயர் (2)**

1. குருகு, 2. மாதவி. (57)

## 685. அகத்தியின் பெயர்

அச்சம் அகத்தி ஆகும் என்ப.

**அகத்தியின் பெயர் (1)**

அச்சம்.

பாடவேறுபாடு—விளக்கம்

அச்சங் கரீர மகத்தி யாகும்.
அச்சங் சரீர முனியே யகத்தி - அச்சுப்பிரதி.

அச்சம் வாகை யகத்தி யாகும்
அச்சமுனி கரீரம் வாகைய கத்தி யாகும். (58)

## 686. எருக்கின் பெயர்

அருக்கம், எருக்கே.

**எருக்கின் பெயர் (1)**

அருக்கம்

பாடவேறுபாடு—விளக்கம்

2 எருக்கு
அருக்க மெருக்க மாகு மென்ப. (59)

## 687. களாவின் பெயர்

களம், களா வே

**களாவின் பெயர் (1)**

களம்,

பாடவேறுபாடு—விளக்கம்

களக் களாவே
எருக்குக்குங் களாவுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 686, 687-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (60)

## 688. இலந்தையின் பெயர்

இரத்தி, இலந்தை என்னக் கூறுவர்

**இலந்தையின் பெயர் (1)**

இரத்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

1. இரத்தை
இரத்தி வதரி யிலந்தை யாகும் - அச்சுப்பிரதி. (61)

## 689. காயாவின் பெயர்

காசை, பூவை, காயா ஆகும்.

**காயாவின் பெயர் (2)**

1. காசை, 2. பூவை. (62)

## 690. நறவமரத்தின் பெயர்

நறவம், சுள்ளி.

**நறவமரத்தின் பெயர் (1)**

சுள்ளி. (63)

## 691. ஞாழலின் பெயர்

நாகம், ஞாழல்.

**ஞாழலின் பெயர் (1)**

நாகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

நறவத்துக்கும் ஞாழலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 690, 691-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர்.

ஞாழலின் பெயர். நறவஞ் சுள்ளி நாகஞ் ஞாழல் - அச்சுப் பிரதி. (64)

## 692. புன்கின் பெயர்

நத்த மாலம், புன்கு என நவில்வர்.



**புன்கின் பெயர் (1)**

நத்தமாலம். (65)

## 693. குங்கும மரத்தின் பெயர்

மரவம், துருக்கம், குங்குமம் ஆகும்.

**குங்கும மரத்தின் பெயர் (2)**

1. மரவம், 2. துருக்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குங்குமத்தின் பெயர்
இதன் பின்னர் முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புதுச் சூத்திரங்கள் வருமாறு:

சதுரக்கள்ளியின் பெயர்.
13. * வச்சி ரரங்கங் கண்ட ரவத்தொடு
வச்சிரஞ் சதுரக் கள்ளிக்கு வைப்பர்.

அளிச்சத்தின் பெயர்.
14. * நறவஞ் சுள்ளி யருப்பல மணிச்சம். (66)

## 694. தணக்கின் பெயர்

துணவை, தணக்கே

**தணக்கின் பெயர் (1)**

துணவை.

பாடவேறுபாடு—விளக்கம்

1. துணவு (67)

## 695. ஓடைமரத்தின் பெயர்

உலவை, ஓடை.

**ஓடைமரத்தின் பெயர் (1)**

உலவை

பாடவேறுபாடு—விளக்கம்

தணக்குக்கும் ஓடைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 694, 695-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (68)

### 696. ஒடுவை மரத்தின் பெயர்

ஒடுவை, உடுப்பை.

**ஒடுவை மரத்தின் பெயர் (1)**

உடுப்பை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒடுவின் பெயர்
1. ஒடுவே, உடுவை (69)

### 697. உன்னமரத்தின் பெயர்

உன்னம், உழிஞ்சில்

**உன்னமரத்தின் பெயர் (1)**

உழிஞ்சில்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உழிஞ்சியின் பெயர்.
உடுப்பைக்கும் உன்னமரத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 696, 697 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (70)

### 698. ஆண்மரத்தின் பெயர்

எகினம், செம்மரம் ஆண்மரம் என்ப.

**ஆண்மரத்தின் பெயர் (2)**

1. எகினம், 2. செம்மரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சேமரத்தின் பெயர்.
2. சேமரம்
இதன்பின் ஒருமரத்தின் பெயர் என்னும் தலைப்பில், 'ஒருமர மொருபெய ருரைக்குங் கிளவி' என ஒரு நூற்பா ஒருசில பிரதிகளில் உளது. (71)

### 699. கமுகின் பெயர்

கந்தி, பூகம், பூதகம், கமுகே.

**கமுகின் பெயர் (3)**

1. கந்தி, 2. பூகம், 3. பூகதம்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

3. பூக்கம்.

### 700 பனையின் பெயர்

பெண்ணை, தாலம், புல், தாளி, போந்தை என்று
எண்ணிய நாமம் பனையின் பெயரே.

**பனையின் பெயர் (5)**

1. பெண்ணை, 2. தாலம், 3. புல், 4. தாளி, 5. போந்தை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2 - 3 நீலம் புற்றாளி
2 : 2 - 4 பெயரும் போந்தும் பனையே
2 : 3 - 4 பனையென விசைப்பர்.
2 திண்ணிய போந்தை பனையெனச் செப்புவர். (73)

### 701. இளம்பனையின் பெயர்

போந்தை இளம்பனை ஆகப் புகல்வர்.

**இளம்பனையின் பெயர் (1)**

போந்தை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3. ஆகவும் (74)

### 702. தெங்கின் பெயர்

நாளிகேரம், தெங்கு, தாழை என நவில்வர்.

**தெங்கின் பெயர் (2)**

1. நாளிகேரம், 2. தாழை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 - 4 தாழை தென்னை
நாளிகேரந் தடந்தெங்கு தாழை.
நாளிகேர மிலாங்கலி யேடகம்
தாழைகேளி தெங்கெனச் சாற்றுவர் - பிற்பதிப்புக்கள். (75)

## 703. மூங்கிலின் பெயர்

காம்பு, திரிகண், வேழம், சந்தி,
தூம்பு, முளை. வெதிர், விண்டு, வேரல்,
முந்தூழ், தட்டை, கீசகம். வேய், பணை,
அம்பு, வரை, வேணு, கழை, அமை, ஓங்கல்,
திகிரி, கிளை, கண், பாண்டில் உட்பட
வருபவை மூங்கில் எனவகுத் தனரே.

**மூங்கின் பெயர் (24)**

1. காம்பு, 2. திரிகண், 3. வேழம், 4. சந்தி, 5. தூம்பு, 6. முளை, 7. வெதிர், 8. விண்டு, 9. வேரல், 10. முந்தூழ், 11. தட்டை, 12. கீசகம், 13. வேய், 14. பணை, 15. அம்பு, 16. வரை, 17. வேணு, 18. கழை, 19. அமை, 20. ஓங்கல், 21. திகிரி, 22. கிளை, 23. கண், 24. பாண்டில்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:2 பாதிரி, திகிரிகண்
4:1—2 அம்பு வேணு
5:1—2 பாதிரி கிளையரி, திகிரி கணைகிளை
3—4 பாண்டில் வரையென (76)

## 704. கரும்பின் பெயர்

கழை, வேழம், இக்கு, கன்னல், கரும்பே.

**கரும்பின் பெயர் (4)**

1. கழை, 2. வேழம், 3. இக்கு, 4. கன்னல், (77)

## 705. தாழையின் பெயர்

கண்டல், கேதகை, மடி, கைதை, முடங்கல்,
வண்டு இமிர் தாழை எனவகுத் தனரே.

**தாழையின் பெயர் (5)**

1. கண்டல், 2. கேதகை, 3. மடி, 4. கைதை, 5. முடங்கல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:1 வண்டமர் (78)



## 706. வாழையின் பெயர்

கதலியும், அரம்பையும், வாழை ஆகும்.

**வாழையின் பெயர் (2)**

1. கதலி, 2. அரம்பை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3—4 வாழையெனக் கருதுவர் (79)

## 707. பூவாது காய்க்கும் மரத்தின் பெயர்

கோளி, பூவாது காய்க்கும் (குளிர்) மரம்

**பூவாது காய்க்கும் மரத்தின் பெயர் (1)**

கோளி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கோளியின் பெயர் (80)

## 708. வண்டு உணா மலர்மரத்தின் பெயர்

சண்பகமும், வேங்கையும், வண்டு உணா மலர்மரம்.

**வண்டு உணா மலர்மரத்தின் பெயர் (2)**

1. சண்பகம், 2. வேங்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வண்டு உணா மலர்மரம் ஆவன. (81)

## 709. மரப்பொதுப் பெயர்

பாதவம், தாரு, தருவே, தாவரம்,
(ஓதிய) மூலம், மரப்பொதுப் பெயரே.

**மரப்பொதுப் பெயர் (5)**

1. பாதவம், 2. தாரு, 3. தரு, 4. தாவரம், 5. மூலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:4 தாபரம்
2:2 விருக்கம்—பிற்பதிப்புக்கள். (82)

### 710. மரச் செறிவின் பெயர்

பொதும்பர், மரச்செறிவே.

**மரச்செறிவின் பெயர் (1)** (83)

பொதும்பர்.

### 711. மரப்பொதும்பின் பெயர்

கோடரம், பொதும்பே.

**மரப்பொதும்பின் பெயர் (1)**

கோடரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மரப்பொந்தின் பெயர்.
பொதும்பு—பொந்து. பிங்கலம்.
2 மரப்பொதும்பே.
மரச் செறிவுக்கும் மரப்பொந்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 710. 711-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். இதற்குப் பிரதிபேதம்:
மரச் செறிவுக்குப் பெயர்: (84)
பொதும்பர் கோடரம் பொதும்பு மரச் செறிவே.

### 712. நந்தவனத்தின் பெயர்

(தேம்) பொழில், மரக்கா, தோட்டம், துடைவை,
உய்யானம், சோலை, வனம், உத்தி யானம்,
தண்டலை, கானம், அடவி, பதினொன்றும்
வண்டுஇமிர் நந்தவனம் என இசைப்பர்.

**நந்தவனத்தின் பெயர் (11)**

1. பொழில், 2. மரக்கா, 3. தோட்டம், 4. துடவை. 5. உய்யானம், 6. சோலை, 7. வனம், 8. உத்தியானம், 9. தண்டலை, 10. கானம், 11. அடவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:1 செய்பொழில்
2:3 பொழிலுத்தி
4. 1-3 ஈண்டிய நந்தா வனமென, ஈண்டிய நந்தன வனமென
5 'ஆராமம் பொங்க ராகு மென்ப' என அதிகமாக ஓர் அடி சில பிரதிகளில் உளது. (85)
ஆராமமு மாகு மென்றே அறைவர்-ஒரு பிரதி.



### 713. காட்டின் பெயர்

கடம், வியல், பழுவம், கட்சி, குறும்பொறை,
கடறு, காந் தாரம், அடவி, கான், வனம்,
கவனம், காண்டம், கனம், முளரி,
சுரம், அத்தம், ஆரணியம், கானங், களரி,
(சீர் அணி) பொச்சை, விடர், தில்லம், காடே.

**காட்டின் பெயர் (22)**

1. கடம், 2. வியல், 3. பழுவம், 4. கட்சி, 5. குறும்பொறை, 6. கடறு, 7. காந்தாரம், 8. அடவி, 9. கான், 10. வனம், 11. கவனம், 12. காண்டம், 13. கனம், 14. முளரி, 15. சுரம், 16, அத்தம், 17. ஆரணியம், 18. கானம், 19. களரி, 20. பொச்சை, 21. விடர், 22. தில்லம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2:3-4 அடவிகா னகம்வனம்
3:1 ககனம், 3. விபினம், கட்சி, கட்டம்
4:3-4 கானங்கான் களரி
4 ஆரணி யஞ்சுர மத்தங்கான் களரி (86)

### 714. முதுகாட்டின் பெயர்

முதை, இலை உதிர்வு பிறங்குஇயல் முதுகாடே.

**முதுகாட்டின் பெயர் (1)**

முதை

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இலையுதிர்ந்த முதுகாட்டின் பெயர், முதுகரி காட்டின் பெயர். முதையல் என்னும் பெயர்.
1. முதையிலை, முதையல், 3, பிறங்கிய (87)

### 715. கரிகாட்டின் பெயர்

பொச்சையும், சுரமும், (பொதி) கரி காடே.

**கரிகாட்டின் பெயர் (2)**

1. பொச்சை, 2. சுரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கரிந்த காட்டின் பெயர்.
3-4 பொதிகரிக் காடே. (88)

## 716. காவற்காட்டின் பெயர்

அரணம், மிளை, காவற் காடு என அறைவர்.

**காவற் காட்டின் பெயர் (2)**
1. அரணம், 2. மிளை.

**பாடவேறுபாடு—விளக்கம்**
1-2 அரணமிளை காவற், அரணிளை காவற் (89)

## 717. ஒருபெயர் மரவகைப் பெயர்

ஒருமரம் ஒரு பெயர் உரைக்கும் கிளவி
வரைவு இல் என்மனார் வள்ளியோரே.

ஒருபெயர் மரவகைப் பெயர் : ஒவ்வொரு மரத்தினை உணர்த்தும் ஒவ்வொரு பெயர்களையும் சொல்லப்புகின் அளவுபடாது என்பர் புலவர்.

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (90)

## 718. மிடைதூற்றின் பெயர்

இறும்பே, மிடைதூறு,

**மிடைதூற்றின் பெயர் (1)**

இறும்பு,

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : குறுங்காட்டின் பெயர்
2. மிடைதூறு
இறும்பே மிடைதூ றெனவிளம் பினரே. (91)

## 719. ஈங்கையின் பெயர்

இண்டை, ஈங்கை.

**ஈங்கையின் பெயர் (1)**

இண்டை



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இண்டையின் பெயர்
இண்டே யீங்கை யீஞ்சை யென்ப.

மிடைதூற்றுக்கும் இண்டைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 718, 719-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கொள்வர். (92)

## 720. முள்ளுடை மூலத்தின் பெயர்

முண்டகம், முள்ளுடை மூலம் என்ப.

**முள்ளுடை மூலத்தின் பெயர் (1)**

முண்டகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : முள்மரத்தின் பெயர்
3 - 4 மூலமெென மொழிய (93)

## 721. முள்ளின் பெயர்

கண்டகம், கடுவே, முள்ளெனக் கருதுவர்.

**முள்ளின் பெயர் (2)**

1. கண்டகம், 2. கடு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. கடுவிவை. (94)

## 722. மரவயிரத்தின் பெயர்

ஆசினி, கரிலே, அரியே, வயிரம்,
சேகே, மரத்தின் காழ்ப்புஎனச் செப்புவர்.

**மரவயிரத்தின் பெயர் (5)**

1. ஆசினி, 2. கரில், 3. அரி, 4. வயிரம், 5. சேகு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 2 கரியே 4. வைரம்.
2 : 3 காழெனச். (95)

### 723. பிரம்பின் பெயர்

வேத்திரம், சாதி, சூரல், பிரம்பே.

**பிரம்பின் பெயர் (3)**

1. வேத்திரம், 2. சாதி, 3. சூரல். (96)

### 724. உள்வயிர மரத்தின் பெயர்

அகக்கா ழனவே வன்மரம் ஆகும்
அவையே கருங்காலி முதலா யுள்ளன.

**உள்வயிர மரத்தின் பெயர் (1)**

வன்மரம். அவை கருங்காலி முதலாயுள்ளன,

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : உள்வயிரத்தின் பெயர், ஆண்மரத்தின் பெயர்.
1 : 1 - 3 அகக்காழ் வன்மரம் ஆண்மரம்
2 1 - 2 அவைகருங் காலி. (97)

### 725. புறவயிர மரத்தின் பெயர்

புறக்கா ழனவே வன்புல் என்ப,
அவைதாம், தெரிக்கின் பனைதெங்கு கமுகு மூங்கில்.

**புறவயிர மரத்தின் பெயர் (1)**

வன்புல்; அவை பனை, தெங்கு, கமுகு, மூங்கில்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : புற வயிரத்தின் பெயர், பெண்மரத்தின் பெயர்
1 : 4 ஆகும்
1. புறக்காழ் வன்புல் பெண்மர மாகும். (98)

### 726. வயிரமல்லாத மரத்தின் பெயர்

முருக்கு நார்பான் மரமுத லாயின
வெளிற்றுமரம் என்னும் விகற்பம் பெறுமே

**வயிரமல்லாத மரத்தின் பெயர் (1)**

முருக்கு, மற்றும் நாரும் பாலுமுள்ள மரம் முதலாயின.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : வயிரமில் மரத்தின் பெயர்.
2 : 1 - 2 வெளிறலி மரமெனும். 3. விகற்பமும் (99)



### 727. சிறுதூற்றின் பெயர்

அரிலே, பதுக்கை, சிறுதூறு ஆகும்.

**சிறுதூற்றின் பெயர் (2)**

1. அரில், 2. பதுக்கை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 பதுகம். (100)

### 728. மருந்து என்னும் பெயர்

புல்லும், மரனும், புதலும், பூடும்;
வல்லியும் பெயர்க்கொடை மருந்து எனப் படுமே.

**மருந்து என்னும் பெயர் (4)**

1. புல், 2. மரன், 3. புதல், 4. பூடு இவற்றிற்கு உரித்து.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மருந்து என்னும் சொற்பொருட் பெயர். (101)

### 729. (வி) சல்லிய கரணி

தைத்த அத்திரம் சத்திரம் தணிக்கும்
மெய்த்த நல் மருந்தே (வி) சல்லிய கரணி

**(வி) சல்லிய கரணி**

அத்திரம் சத்திரம் தைத்த புண் மாற்றும் மருந்து.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சல்லிய கரணியின் பெயர், சல்லிய கரணி என்னும் பெயர், அத்திசரத்தின் தைத்த புண் மாற்று மருந்தின் பெயர். (102)

### 730. சந்தான கரணி

துண்டம் ஆன உறுப்புத் துணிவினைச்
சந்துசெய் மருந்தே சந்தான கரணி.

**சந்தான கரணி**

துணிபட்ட உறுப்பினைப் பொருத்தும் மருந்தின் பெயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1: 4 துணியினைச்
2:1 சந்திசெய்
தலைப்பு : சந்தான கரணியின் பெயர், துணிபட்ட உறுப்பினைப் பொருத்தும் மருந்தின் பெயர் (103)

### 731. சமனிய கரணி

விரணமும் தழும்பும் நீக்கி மெய்யினை
தகைமைசெய் மருந்தே சமனிய கரணி.

**சமனிய கரணி**

விரணம் தழும்புகளை நீக்கும் மருந்தின் பெயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சமான கரணியின் பெயர், விரணந் தழும்புகளை நீக்கும் மருந்தின் பெயர்.
1 : 1 இரணமும்
2 : 1-4 சமனகரணி, சமானகரணி, சவ்வன்னகரணி.
(104)

### 732. மிருதசஞ்சீவினி

உயிர்தரும் மருந்தே மிருதசஞ்சீவினி.

மிருதசஞ்சீவினி :

உயிர் தரும் மருந்து.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மிருதசஞ்சீவினியின் பெயர், அமிர்தசஞ்சீவியின் பெயர்.
2-3 மிருதசஞ்சீவி, அமிர்தசஞ்சீவினி, அமுதசஞ்சீவணி
(105)

### 733. மரமுதலிளமைப் பெயர்

பிள்ளை, குழவி, கன்றே, போத்து எனக்
கொள்ப மரம்முதல் இளமைப் பெயர்க்கொடை
நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே.

**மரமுதலிளமைப் பெயர் (4)**

1. பிள்ளை, 2. குழவி, 3. கன்று, 4. போத்து நெல்லும் புல்லும் அவ்விளமைப் பெயர் பெறா.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மரமுதலியவிளமைப் பெயர்.
3 : 3-4 நேரா வப்பெயர்-பிற்பதிப்புக்கள்.
அவ்விளமைக்குச் சேராதன என்னும் தலைப்பில் 3-ஆம் அடியைத் தனி நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.
(106)

### 734. மரக்கொம்பின் பெயர்

பொங்கர், காம்பு, சாகை, உறுப்பு,
கோடு, பிறக்கம், சினை, பணை, உலவை,
கோடரம், விடபம் தரு, மரக்கொம்பே

**மரக்கொம்பின் பெயர் (12)**

1. பொங்கர், 2. காம்பு, 3. சாகை, 4. உறுப்பு, 5. கோடு, 6. பிறக்கம், 7. சினை, 8. பணை, 9. உலவை, 10. கோடரம், 11. விடபம், 12. தரு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 3 சாய்கை
2 : 2 விடவி (107)

### 735. இளங்கொம்பின் பெயர்

உலவை, தழையே வளர், இளங் கொம்பே.

**இளங்கொம்பின் பெயர் (3)**

1. உலவை, 2. தழை, 3. வளர்

பாடவேறுபாடு—விளக்கம்

3. வளாரிளங்
அச்சுப் பிரதியில் இது இரண்டு நூற்பாவாகப் பின்வரும் தலைப்புக்களின் கீழ்க் காணப்படுகின்றன:
தழையின் பெயர்
உலவை தழையே.
இளங்கொம்பின் பெயர்
வளாரிளங் கொம்பே. (108)

### 736. இலையின் பெயர்

பத்திரம், ஓலை, பாசடை, தண்ணடை,
சாசை, தமாலம், தழை, பாசிலை, அடை,
(பேசிய) பன்னம், இலை எனப்படுமே.

**இலையின் பெயர் (10)**

1. பத்திரம், 2. ஓலை, 3. பாசடை, 4. தண்ணடை 5. சாகை, 6. தமாலம், 7. தழை, 8. பாசிலை, 9. அடை 10. பன்னம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 1 சாய்கை, 3-4 தழைபச் சிலையடை.
3 : 4 பெறுமே. (109)

## 737. தளிரின் பெயர்

வல்லரி, குழை, முறி, மஞ்சரி, கிசலயம்
பல்லவம், அலங்கல், கிளை, தளிர் ஆகும்.

**தளிரின் பெயர் (8)**

1. வல்லரி, 2. குழை, 3. முறி, 4. மஞ்சரி, 5. சிசலயம், 6. பல்லவம். 7. அலங்கல், 8. கிளை. (110).

## 738. தளிர்த்தலின் பெயர்

இலிர்த்தலும். சிலிர்த்தலும், குழைத்தலும், தளிர்த்தல்.

**தளிர்த்தலின் பெயர் (3)**

1. இலிர்த்தல், 2 சிலிர்த்தல், 3. குழைத்தல்

பாடவேறுபாடு—விளக்கம்

இலிர்த்தலுங் குழைத்தலுந் தழைத்தலுந் தளிர்த்தல். (111)

## 739. குருத்தின் பெயர்

முருந்தே முதலில் செறி (வெண்) குருத்தே.

**குருத்தின் பெயர் (1)**

1. முருந்து
தலைப்பு : அடிவெண் குருத்தின் பெயர் (112)

## 740. கொத்தின் பெயர்

தொத்தும், இணரும், துணரும், மஞ்சரியும்
கொத்தின் தொடர்ச்சியைக் கூறும் கிளவி.



**கொத்தின் பெயர் (4)**

1. தொத்து, 2. இணர், 3. துணர், 4. மஞ்சரி (113)

## 741. காயின் பெயர்

பசுங்காய், தீயளி

**காயின் பெயர் (1)**

1. தீயளி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பசுங்காயின் பெயர்
2 தீவிளி, தீவளி (114)

## 742. பழத்தின் பெயர்

பலம், கனி, பழமே

**பழத்தின் பெயர் (2)**

1. பலம், 2. கனி

பாடவேறுபாடு—விளக்கம்

காய்க்கும் பழத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் 741 742—ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (115)

## 743. பரலினுட்படு குருத்தின் பெயர்

பயினே, பரலின் உட்படு குருத்தே

**பரலினுட்படு குருத்தின் பெயர் (1)**

1. பயின்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உட்படுகுருத்தின் பெயர்
1. பிசினே (116)

## 744. வெட்டுக் குருத்தின் பெயர்

பிசினே, ஆனி, வெட்டுக் குருத்தே

**வெட்டுக்குருத்தின் பெயர் (2)**

1. பிசின், 2. ஆனி. (117)

### 745. நந்தியா வர்த்தத்தின் பெயர்

வலம்புரி, நந்தியா வர்த்தம் ஆகும்.

**நந்தியா வர்த்தத்தின் பெயர் (1)**

1. வலம்புரி

பாடவேறுபாடு—விளக்கம்

2-3 நந்தியா வருத்த, நந்தியா வட்ட (118)

### 746. கஞ்சாவின் பெயர்

கஞ்சம், குல்லை, கஞ்சா ஆகும்.

**கஞ்சாவின் பெயர் (2)**

1, கஞ்சம், 2, குல்லை (119)

### 747. நொச்சியின் பெயர்

சிந்து வாரம், நீர்க்குண்டி, நொச்சி

**நொச்சியின் பெயர் (2)**

1. சிந்துவாரம் 2. நீர்க்குண்டி

பாடவேறுபாடு—விளக்கம்

3. நீர்க்குண்டி, நீர்க்குண்டிகை. (120)

### 748. செங்காந்தளின் பெயர்

காந்தள், தோன்றி, பற்றை, கோடல் என்று
ஆய்ந்த நான்கும் செங் காந்தள் ஆகும்.

**செங்காந்தளின் பெயர் (4)**

1. காந்தள், 2. தோன்றி, 3. பற்றை, 4. கோடல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : காந்தளின் பெயர்
1:2-4 பொற்றை கோடல் தோன்றியென்
2:2-3 நான்கும் காந்தள்.



இதன்பின், செங்காந்தளின் பெயர் என்னும் தலைப்பில், 'காந்த டோன்றி பற்றை செங்காந்தள்' என ஒரு நூற்பா சில பிரதிகளில் காணப்படுகிறது. பற்றை என்பதற்கு பொற்றை என்றும் வேறுபாடு உண்டு. (121)

### 749. கோடல் என்னும் பெயர்

வெண்காந்தள் செங்காந்தள் என்று இரு விகற்பமும்
கொண்டே வழங்கும் கோடல் பெயரே.

**கோடல் என்னும் பெயர் (2)**

1. வெண்காந்தள், 2. செங்காந்தள்.
இரண்டுக்கும் வழங்கும் பெயர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோடை யென்னும் பெயர்
1:1-2 செங்காந்தள் வெண்காந்தள்
2:3 கோடை (122)

### 750. ஊமத்தையின் பெயர்

உன்மத் தம்மே, ஊமத்தைப் பெயரே.

**ஊமத்தையின் பெயர் (1)**

1. உன்மத்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஊமத்தின் பெயர்
3-4 ஊமத்தையாகும்.
உன்மத்த மத்த மூமத்தின் பெயரே. (123)

### 751. ஆமணக்கின் பெயர்

ஏரண்டம், ஆமணக்கு.

**ஆமணக்கின் பெயர் (1)**

1. ஏரண்டம். (124)

### 752. குறிஞ்சியின் பெயர்

கோரண்டம், குறிஞ்சி.

**குறிஞ்சியின் பெயர் (1)**

1. கோரண்டம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

ஆமணக்குக்குங் குறிஞ்சிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 751, 752-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (125)

## 753. அலரியின் பெயர்

கரவீரம், அலரி, கணவீரம் ஆகும்.

**அலரியின் பெயர் (2)**

1. கரவீரம், 2. கணவீரம் (126)

## 754. வெட்சியின் பெயர்

செச்சை, சிந்தூரம், வெட்சி ஆகும்.

**வெட்சியின் பெயர் (2)**

1. செச்சை, 2. சிந்தூரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

சச்சை வெட்சி சிந்தூரஞ் சேதாரம்.
செச்சை சிந்தூரஞ் சேதாரம் வெட்சி. (127)

## 755. சிறுபூளையின் பெயர்

உழிஞை, சிறுபூளை, எனஉரைத் தனரே.

**சிறுபூளையின் பெயர் (1)**

1. உழிஞை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 எனவகுத் தனரே, ஆகு மென்ப. (128)

## 756. பருத்தியின் பெயர்

பஞ்சி, பன்னல், கார்ப்பாசம், பருத்தி.

**பருத்தியின் பெயர் (3)**

1. பஞ்சி, 2. பன்னல், 3. கார்ப்பாசம்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

1. பஞ்சு, பரியே, பரிபஞ்சி.
3. கார்ப்பாசம். (129)

## 757. திப்பிலியின் பெயர்

திப்பிலி, காமன், சிறுமூலகமே.

**திப்பிலியின் பெயர் (2)**

1. காமன், 2. சிறுமூலகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. திப்பலி. (130)

## 758. துளசியின் பெயர்

குல்லை, துளவம், துழாய் என மொழிப.

**துளசியின் பெயர் (3)**

1. குல்லை, 2. துளவம், 3. துழாய்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2-4 துளபம்வனம் துழாயெனக் கூறுவர்.
துளசிகுல்லை துளபம்வனம் துழாய்-அச்சுப்பிரதி. (131)

## 759. மிளகின் பெயர்

மரீசி, கறிஇவை மிளகு என வைப்பர்.

**மிளகின் பெயர் (2)**

1. மரீசி, 2. கறி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 மிளகென லாகும்.
மரீசங் கறிமிரியல் கறியென வைப்பர். (132)

## 760. மஞ்சளின் பெயர்

மஞ்சள், அரிசனம்.

**மஞ்சளின் பெயர் (1)**

1. அரிசனம்

பாடவேறுபாடு—விளக்கம்

அரிசன மரித்திர மஞ்ச ளாகும். (133)

## 761. கருணைக்கிழங்கின் பெயர்

கந்தம், கருணை.

**கருணைக்கிழங்கின் பெயர் (1)**

1. கந்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 கரணை, கருணை
கந்தை சூற்பங் கருணை யெனக் கருதுவர்.
மஞ்சளுக்குங் கருணைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 760, 761-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (134)

## 762. சிறுகிழங்கின் பெயர்

சுரசம் சிறுகிழங்கு ஆகும் என்ப.

**சிறுகிழங்கின் பெயர் (1)**

1. சுரசம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. சுரதம் (135)

## 763. வாசந்தரு பண்டத்தின் பெயர்

தகரம், தக்கோலம், கோட்டம், சாதிக்காய்,
இலவங்கம், ஏலம், கச்சோலம், மாஞ்சி எனப்
பகரும் வாசம்தரு பண்டப் பெயரே,

**வாசந்தரு பண்டத்தின் பெயர் (8)**

1, தகரம், 2. தக்கோலம், 3. கோட்டம், 4. சாதிக்காய், 5. இலவங்கம், 6. ஏலம், 7. கச்சோலம், 8. மாஞ்சி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 தற்கோலம் கொட்டம்,
2 இலவங்க மாஞ்சி கச்சோல மேலமெனப்

இதன்பின் முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புதுச் சூத்திரங்கள் வருமாறு:



வெட்டிவேரின் பெயர்
15. * மூல கந்தம் பீதகத் தோடு
வேரியிரு வேலி வெட்டிவே ராகும்.
இலாமிச்சையின் பெயர்
16. * வேர் வாச மிலாமிச்சை, மேலா கும்மே. (136)

## 764. கடுகின் பெயர்

கடிப்பகை, ஐயவி, கடுகின் பெயரே.

**கடுகின் பெயர் (2)**

1. கடிப்பகை, 2. ஐயவி (137)

## 765. கொத்தமல்லியின் பெயர்

உருளரிசி, கொத்த மல்லி என உரைப்பர்.

**கொத்தமல்லியின் பெயர் (1)**

1. உருளரிசி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொத்துமல்லியின் பெயர்
2-3 கொத்துமலி யென்ன, கோத்தமூரியென (138)

## 766. கொடிக்குழலின் பெயர்

கழங்கே, மூழல், கொடிக் கழல் எனக் கருதுவர்

**கொடிக்குழலின் பெயர் (2)**

1. கழங்கு, 2. மூழல்

பாடவேறுபாடு—விளக்கம்

1. கழங்கு 2. முழல், யுழல் 3-4 கொடிக்கழலாகும்.
அச்சுப்பிரதி இதனை இருநூற்பாவாகப் பின்வருமாறு தந்துள்ளது.

கழங்கு அல்லது கழற்காயின் பெயர்
கச்ங்கே மூழல்
கழங்கின் கொடியின் பெயர்
சொடிக் கழலாகும் (139)

## 767. கிலுகிலுப்பையின் பெயர்

பகன்றை, கிலுகிலுப்பை

**கிலுகிலுப்பையின் பெயர் (1)**

1. பகன்றை

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 பகண்டை

(140)

### 768. சேம்பின் பெயர்

சகுடம், சேம்பே

**சேம்பின் பெயர் (1)**

1. சகுடம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

'கிலுகிலுப்பைக்கும் சேம்புக்கும் பெயர்' என்னும் தலைப்பில் 767, 768-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர்.

(141)

### 769. சிறுகீரையின் பெயர்

சில்லி, சாகினி, சிறுகீரைப் பெயரே

**சிறுகீரையின் பெயர் (2)**

1. சில்லி, 2. சாகினி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சிறுகீரைப் பெயர்
3 சிறுகீரைப்

இதன்பின் முதற் பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த புதுச் சூத்திரங்கள் ஆறு வருமாறு:

கொத்தான் பெயர்
17. * நந்தை கொத்தா னரந்தையு மாகும்

பாற்சொற்றியின் பெயர்
18. * பாயசம் பாற்சொற்றி பனசமு மாகும்

குன்றியின் பெயர்
19. * குருவிந்தர் குஞ்சங் குன்றிப் பெயரே

கொளிஞ்சியின் பெயர்
20. * கோளி கொளிஞ்சி

நாயுரீஇயின் பெயர்
21. * கரமஞ்சரி நாயுரீஇ யென்ப.

இஞ்சியின் பெயர்
22. * இஞ்சி நறுமறுப் பல்ல மென்ப.

(142)



### 770. கற்றாழையின் பெயர்

குமரி, கற்றாழை ஆகக் கூறுவர்.

**கற்றாழையின் பெயர் (1)**

1. குமரி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3 யாமெனக்
குமரிகன்னி சத்தி சாரணை. (143)

### 771. வழுதலையின் பெயர்

வங்கம், பிருகதி, வழுதுணை, வழுதலை.

**வழுதலையின் பெயர் (3)**

1. வங்கம், 2. பிருகதி, 3. வழுதுணை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கத்திரியின் பெயர்.
2 பிருகதிர். (144)

### 772. மலைநெல்லின் பெயர்

ஐவனம், மலைச்சாரல் விளைநெல் ஆகும்.

**மலைநெல்லின் பெயர் (1)**

ஐவனம்,

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : மலைச்சாரல் விளைநெல்லின் பெயர்,
மலைச்சாரல் நெல்லின் பெயர். (145)

### 773. குளநெல்லின் பெயர்

நீர்வாரம், குளநெல்.

**குளநெல்லின் பெயர் (1)**

1. நீர் வாரம். (146)

## 774. செய்ந்நெல்லின் பெயர்

சாலி. செய்ந்நெல்லே.

**செய்ந்நெல்லின் பெயர் (1)**

1. சாலி.

பாடவேறுபாடு—விளக்கம்

குளநெல்லுக்குஞ் செய்ந்நெல்லுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 773, 774-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (147)

## 775. செந்நெல்லின் பெயர்

விரீகி. செஞ்சாலி, என்ன விளம்புவர்.

**செந்நெல்லின் பெயர் (2)**

1. விரீகி, 2. செஞ்சாலி.

பாடவேறுபாடு—விளக்கம்

2—4 செழுஞ்சாலி யென்னல் வேண்டும்.

செந்நெல் விரீகி செஞ்சாலி யாகும்.

இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை.

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பா.

போரின் பெயர்.

23. *சும்மை குவால் போர்.

இதன்பின் அரிசியின் பெயர் என ஒரு நூற்பாவும் அச்சுப் பிரதியில் உள்ளது.

அரிசியின் பெயர்.

அரியே தண்டுல மரிசி யாகும்.

இது பிரதிகளில் காணப்படவில்லை. எனவே, இதுவும் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த நூற்பாவாக இருக்கலாமோ என ஐயத்திற்கிடமாயுள்ளது. (148)

## 776. தோரையின் பெயர்

இயவை, தோரை எனும் உணவின் பெயரே.

**தோரையின் பெயர் (1)**

இயவை.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வேயரிசியின் பெயர்.

இயவை தோரை யெனும்வே யரிசி—அச்சுப்பிரதி.

மூங்கிலரிசி முதலான உணவின் பெயர், துவரையின் பெயர் என்னும் தலைப்புக்களும் இந்நூற்பாவிற்கு உண்டு. (149)

## 777. சோளத்தின் பெயர்

சொன்னலும், இறுங்கும், சோளம் ஆகும்.

**சோளத்தின் பெயர் (2)**

1. சொன்னல், 2. இறுங்கு. (150)

## 778. கருந்தினையின் பெயர்

இறடி, கருந்தினை.

**கருந்தினையின் பெயர் (1)**

இறடி. (151)

## 779. செந்தினையின் பெயர்

ஏனல், செந்தினை.

**செந்தினையின் பெயர் (1)**

ஏனல்.

கருந்தினைக்கும் செந்தினைக்கும் பெயர் என்னும் தலைப்பில் 778, 779-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதனை அடுத்து முதற் பதிப்பாசிரியர் சேர்த்துள்ள ஒன்பது நூற்பாக்கள் வருமாறு :

உழுந்தின் பெயர் :

24. * மாட முழுந்தே.

துவரையின் பெயர் :

25. * ஆடகந் துவரை.

காராமணியின் பெயர் :

26. * கூல மிதை காராமணிக் கூற்றே.

கடலையின் பெயர் :

27. * மஞ்சூரங் கடலை.

பயற்றின் பெயர் :

28. * முற்கம் பயறே.

கம்பின் பெயர்

29. * கவலைபுல் செந்தினை கம்பா கும்மே

கோதுமையின் பெயர்

30. * கோதி கோதுமை

கொள்ளின் பெயர்

31. குலுத்தங் காணங் கொள்ளா கும்மே.

வரகின் பெயர்

32. * வரகுகோத் திரவம். (152)

### 780. அவரை துவரை முதற் பொதுப்பெயர்

முதிரை, அவரை, துவரை, முதலாயின.

**அவரை துவரை முதற் பொதுப்பெயர் (1)**

முதிரை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அவரை துவரை முதலாயினவற்றின் பெயர்

முதிரையென்னும் பெயர்

1 முதுரை

இதன் பின் விதையின் பெயர் என்னும் தலைப்பில் அச்சுப் பிரதியில் பின்வரும் நூற்பா ஒன்று காணப்படுகிறது.

பரல்காழ் வீசம் வித்து விதையாம்.

வீசம் என்பதனைப் பீசம் என்றும் எழுதுவர். இந்நூற்பா பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. தானியங்களின் பெயர்களை முறையே கூறிவருமிடத்து இடையே விதையின் பெயர் என ஒருநூற்பா அமைதலும் பொருத்தமின்மையாம். (153)

### 781. எள்ளின் பெயர்

எண்ணும், திலமும், எள்ளென இசைப்பர்.



**எள்ளின் பெயர் (2)**

1. எண், 2. திலம்

பாடவேறுபாடு—விளக்கம்

இதனோடு, 'குளியதற் குவரு நோயின் பெயரே' என ஓரடி சில பிரதிகளில் அதிகம் உள்ளது. (154)

### 782. எள்ளிளங்காயின் பெயர்

கவ்வை, எள்இளங் காய்ஆ கும்மே.

**எள்ளிளங்காயின் பெயர் (1)**

(1) கவ்வை (155)

### 783. கதிரின் பெயர்

குரல், கதிர் ஆகும்.

**கதிரின் பெயர் (1)**

குரல் (156)

### 784. பதரின் பெயர்

பதடி, பதரே.

**பதரின் பெயர் (1)**

1. பதடி

பாடவேறுபாடு—விளக்கம்

கதிருக்கும் பதருக்கும் பெயர் என்னும் தலைப்பில் 783, 784 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (157)

### 785. தினைத்தாளின் பெயர்

இருவியும், அருவியும், தினைத்தாள், ஆகும்.

**தினைத்தாளின் பெயர் (2)**

1. இருவி, 2. அருவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன் பின்னர்,

'அந்தரி தவிடென வறைந்தனர் புலவர்'
'அரியே தணிடுல மரிசி யாகும்'
என இருநூற்பாக்கள் ஒரு சில பிரதிகளில் உள. (158)

## 786. வைக்கோலின் பெயர்

வையே, பலாலம், வைக்கோல் ஆகும்,
அவ்வழி, வழுதும், அழியும் பெறுமே.

**வைக்கோலின் பெயர் (4)**

1. வை, 2. பலாலம், 3. வழுது, 4. அழி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

2 : 2-3 முழுது மரியும்

2 ஆம் அடியைத் தனி நூற்பாவாக அச்சுப்பிரதி பின்வருமாறு தருகிறது:

வழுது மொரோவழி வையும் பெறுமே. (159)

## 787. தூற்றா நெற்குவையின் பெயர்

பொங்கழி, தூற்றா நெற்கூடு ஆகும்,

**தூற்றா நெற்குவையின் பெயர் (1)**

1. பொங்கழி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு: தூற்றா நெற்பொலியின் பெயர், தூற்றா நெற்கூட்டின் பெயர், தூற்றா நெல்லின் பெயர், பொங்கழியின் பெயர். (160)

## 788. பயிரின் பெயர்

பயிரே, பசும்புல், பைங்கூழ், ஆகும்,

**பயிரின் பெயர் (2)**

1. பசும்புல், 2, பைங்கூழ்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு , பைங்கூழின் பெயர் (161)



## 789. புற்பிறப்பின் பெயர்

புதற்புல் எனவரு புற்பிறப்பு ஆகும்.

**புற்பிறப்பின் பெயர் (1)**

1. புதற்புல்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒருசார் புல்லின் பெயர். புதற்புல்லின் பெயர்

2 எனவொரு, என்பன.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இருபுது நூற்பாக்கள் வருமாறு:

பச்சறுகின் பெயர்

33. * பதமுந் தூர்வையும் பச்சறு காகும்.

இளம்புல்லின் பெயர்

34. *சட்ப மிளம்புல்

இதனையும் பிற்பதிப்புகள் சட்ட மிளம்புல் என மாற்றியுள்ளன. சட்பம் (பீஷ்ப) என்பதே சரியான வடிவம். (162)

## 790. தெங்குநார்ப்பாளையின் பெயர்

நாரி, நெய்யரி, தெங்குநார்ப் பாளை,

**தெங்குநார்ப்பாளையின் பெயர் (2)**

1. நாரி. 2. நெய்யரி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தெங்கினார்ப்பாளையின் பெயர், மன்னாடையின் பெயர்.

1. நாரரி, 3. தெங்கினார்ப் (163)

## 791. கிழங்கின் பெயர்

மூலம், கந்தம், கிழங்குஎன மொழிப.

**கிழங்கின் பெயர் (2)**

1. மூலம், 2. கந்தம். (164)

## 792. கோற்கொடியின் பெயர்

இலதை எனும்பெயர் கோற்கொடிக்கு எய்தும்.

**கோற்கொடியின் பெயர் (1)**

(1) இலதை (165)

### 793. கற்பகஞ்சேர் கொடியின் பெயர்

கற்பகம் சேர்கொடி காம வல்லி.

**கற்பகஞ்சேர் கொடியின் பெயர் (1)**

(1) காமவல்லி

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கற்பகக் கொடியின் பெயர். காமவல்லியின் பெயர், காமவல்லியென்னும் பெயர். (166)

### 794. கொடிப்பிறப்பின் பெயர்

கோற்கொடி, மென்கொடி, கொடியின் பிறப்பே.

**கொடிப் பிறப்பின் பெயர் (2)**

1, கோற்கொடி, 2. மென்கொடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கொடிவகைப் பெயர் (167)

### 795. கொடியின் பெயர்

வல்லியும், நாழிலும், வள்ளியும், கொடியே.

**கொடியின் பெயர் (3)**

1. வல்லி, 2. நாழில், 3. வள்ளி. (168)

### 796. மல்லிகையின் பெயர்

மல்லிகை, மௌவல்.

**மல்லிகையின் பெயர் (1)**

மௌவல்

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. மல்லிகை மவ்வல், மவ்வல் மல்லிகை (169)



### 797. இருவாட்சியின் பெயர்

மயிலை, இருவாட்சி.

**இருவாட்சியின் பெயர் (1)**

மயிலை

**பாடவேறுபாடு—விளக்கம்**

மயிலை யிருவாட்சி யாகு மென்ப.

மல்லிகைக்கும் இருவாட்சிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 796, 797-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (170)

### 798. முல்லையின் பெயர்

மௌவலும், தளவமும், கற்பும், முல்லை.

**முல்லையின் பெயர் (3)**

1. மௌவல், 2. தளவம். 3. கற்பு.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. மவ்வலும், 2-4 தளவமு முல்லையாகும். (171)

### 799. கருமுகையின் பெயர்

பித்திகை, சாதி, சிறுசெண் பகமென
ஒத்த மூன்றும் கருமுகைக்கு உறும்பெயர்.

**கருமுகையின் பெயர் (3)**

1. பித்திகை, 2. சாதி, 3. சிறுசெண்பகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சிறுசெண்பகத்தின் பெயர்.

பித்திகை சாதி கருமுகை மாலதி
ஒத்த சிறுசண் பகமா கும்மே-பிற்பதிப்புக்கள். (172)

### 800. மௌவலின் பெயர்

மாலதி, மௌவல் ஆகும் என்ப.

**மௌவலின் பெயர் (1)**

1. மாலதி

**பாடவேறுபாடு—விளக்கம்**

2. மவ்வல் 3-4 ஆகுமென வைப்பர்.

இதன் பின்னர் மாலதி யென்னும் பெயர் என்னும் தலைப்பில்,
‘மாலதி சிறுசெண் பகமு மாகும்.’

என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. இது பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. இதனை அடுத்து முதற்பதிப் பாசிரியர் சேர்த்த புது நூற்பா ஒன்று வருமாறு :

மருக்கொழுந்தின் பெயர் :

35. * தமனக மருக்கொழுந்தே. (173)

## 801. கூதாளியின் பெயர்

துடி, கூதாளம், கூதாளி என்ப.

**கூதாளியின் பெயர் (2)**

1. துடி, 2. கூதாளம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கூந்தற்பனையின் பெயர்.

4 என்பர். (174)

## 802. கொவ்வையின் பெயர்

விம்பமும், தொண்டையும், கொவ்வைப் பெயரே.

**கொவ்வையின் பெயர் (2)**

1. விம்பம். 2. தொண்டை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : கோவையின் பெயர்.

3—4 கோவைப் பெயரே,

கொவ்வையென விளம்புவர், கொவ்வையுங் கோவை.

இதனையடுத்து முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த நான்கு நூற்பாக்கள் வருமாறு :

வள்ளையின் பெயர் :

36. *வள்ளை நாளிகம்.



காக்கணத்தின் பெயர் :

37. கன்னி கிகிணி கருவிளை காக்கணம்.

முந்திரிகையின் பெயர் :

38. * மதுரசங் கோத்தனிகை முந்திரிகை யாகும்.

கோத்தனிகை என்பது பிற்பதிப்புப் பாடம். ‘ஜோஸ்தனி’ என்பது வடசொல்லாததாலும், சூடாமணி நிகண்டில் ‘கோத்தனி’ என்றே காணப்படுதலாலும், ‘கோத்தனிகை’ எனலே பொருந்தும்’ எனப் பேராசிரியர் மு. இராகவையங்கார் குறிப்பு எழுதியுள்ளார்.

மலைப்பச்சையின் பெயர் :

39. * குளவி மலைப்பச்சை.

இதன் பின்னர் முதற்பதிப்பில் உள்ள ஒரு நூற்பாவும் பெரும்பான்மைப் பிரதிகளில் இல்லை. அது வருமாறு :

இசங்கின் பெயர் :

குண்டலி முத்தாபல மிசங்கெனக் கூறுவர்.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த ஒரு புது நூற்பா வருமாறு :

வேரின் பெயர் :

40. * சடைதூர் சிவைவேர். (175)

## 803. அடம்பின் பெயர்

அடம்பு, சோபாலிகை.

**அடம்பின் பெயர் (1)**

சோபாலிகை. (176)

## 804. விரிதூற்றின் பெயர்

அதிரல், விரிதூறு.

**விரிதூற்றின் பெயர் (1)**

அதிரல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

அடம்புக்கும் விரிதூற்றுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 803, 804-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (177)

## 805. பீர்க்கின் பெயர்

பீரம், பீர்க்கு.

**பீர்க்கின் பெயர் (1)**

பீரம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புதுச் சூத்திரம் ஒன்று வருமாறு :

பெரும்பீர்க்கின் பெயர் :

41. * பெரும்பீர்க்குப் படலிகை. (178)

## 806. பாகலின் பெயர்

கூலம், பாகல்.

**பாகலின் பெயர் (1)**

கூலம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

பீர்க்குக்கும் பாகலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 805, 806-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகச் சிலர் கொள்வர். (179)

## 807. பகன்றையின் பெயர்

சிவேதை, பகன்றை.

**பகன்றையின் பெயர் (1)**

சிவேதை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : சிவேதையின் பெயர்.

2 பகண்டை. (180)

## 808. சீந்திலின் பெயர்

அமுதவல்லி, சீந்தில்.

**சீந்திலின் பெயர் (1)**

அமுதவல்லி.



**பாடவேறுபாடு—விளக்கம்**

சிவேதைக்குஞ் சீந்திலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 807, 808-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (181)

## 809. காஞ்சொறியின் பெயர்

கண்டூரம், காஞ்சொறி.

**காஞ்சொறியின் பெயர் (1)**

கண்டூரம். (182)

## 810. தாளியின் பெயர்

பஞ்சிகம், தாளி.

**தாளியின் பெயர் (1)**

1 மஞ்சிகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

காஞ்சொறிக்கும் தாளிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 809, 810-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (183)

## 811. நறையாலின் பெயர்

பகன்றை, நறையால்.

**நறையாலின் பெயர் (1)**

பகன்றை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1 பகண்டை.

பகன்றை நறையா லாகப் பகர்வர்.

பகன்றை நறையா லென்னவும் பகர்வர். (184)

## 812. வெற்றிலையின் பெயர்

நாகவல்லி, தாம்பூலம், வெற்றிலை.

**வெற்றிலையின் பெயர் (2)**

1. நாகவல்லி, 2. தாம்பூலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வெத்திலையின் பெயர்.
4. வெத்திலை. (185)

## 813. பிரண்டையின் பெயர்

வச்சிர வல்லி, பிரண்டை ஆகும்.

**பிரண்டையின் பெயர் (1)**

வச்சிரவல்லி. (186)

## 814. அவுரியின் பெயர்

நீலி, அவுரி.

**அவுரியின் பெயர் (1)**

நீலி.

பாடவேறுபாடு—விளக்கம்

2 அவிரி, அவரி. (187)

## 815. குறிஞ்சியின் பெயர்

குறிஞ்சி, சகசரி.

**குறிஞ்சியின் பெயர் (1)**

சகசரி

பாடவேறுபாடு—விளக்கம்

2 செகசரி, சிகசரி, சிககரி.

அவுரிக்கும் குறிஞ்சிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 814, 815-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (188)

## 816. தும்பையின் பெயர்

துரோணம், தும்பை.

**தும்பையின் பெயர் (1)**

துரோணம்.



பாடவேறுபாடு—விளக்கம்

துரோணந் தும்பையாகச் சொல்லுவர்—அச்சுப்பிரதி.
3—4 யாகக் கூறுவர், யென்னச் சொல்லுவர். (189)

## 817. தருப்பையின் பெயர்

குசேயே, தருப்பை.

**தருப்பையின் பெயர் (1)**

குசை.

பாடவேறுபாடு—விளக்கம்

குசையே தருப்பை யென்னக் கூறுவர்—அச்சுப்பிரதி.
3—4 யாகக் கூறுவர். (190)

## 818. கோரையின் பெயர்

எருவை, பஞ்சாய், கோரை என்ப.

**கோரையின் பெயர் (2)**

1. எருவை, 2. பஞ்சாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பஞ்சாய்க் கோரையின் பெயர்.
2—3 பஞ்சாய்க் கோரை 4. யென்பர் யாகும். (191)

## 819. வாட்கோரையின் பெயர்

செருந்தி, வாட்கோரை.

**வாட்கோரையின் பெயர் (1)**

செருந்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

செருந்தி வாட்கோரை யாகச் செப்புவர். (192)

## 820. நாணலின் பெயர்

காசை, நாணல்.

**நாணலின் பெயர் (1)**

காசை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

வாட்கோரைக்கும் நாணலுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 819, 820-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

சிவேதை காசை நாணலெனச் செப்புவர்.

இதனை அடுத்து.

'எருவை வேழங் கொறுக்கச்சி யென்ப'

என ஒரு நூற்பா ஒரு சில பிரதிகளில் காணப்படுகிறது.

இங்கு முதற்பதிப்பாசிரியர் சேர்ந்த புது நூற்பா ஒன்று வருமாறு :

**விழற்புல்லின் பெயர் :**

42. * விரணம் விழற்புல். (193)

### 821. சுரையின் பெயர்

புற்கொடி, (வெண்பூச்) சுரை எனப் புகல்வர்.

**சுரையின் பெயர் (1)**

1. புற்கொடி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1-2 புற்கொடி புழற்கொடி மென்பூச்
அலாபு தும்பி சுரையெனப் புகல்வர்-என்பது பிற்பதிப்புக்கள், (194)

### 822. நீர்முள்ளியின் பெயர்

நீர்முள்ளி, முண்டகம் ஆகும் என்ப.

**நீர்முள்ளியின் பெயர் (1)**

1. முண்டகம், (195)

### 823. பாசியின் பெயர்

நாரம், செவிரம், பதிகம், சைவலம்,
பாசி என்று பகரப் படுமே.

**பாசியின் பெயர் (4)**

1. நாரம், 2. செவிரம், 3. பதிகம், 4. சைவலம்.



**பாடவேறுபாடு—விளக்கம்**

1 : 3 பதியம்
2 : 3-4 பகுத்துரைத்தனரே. (196)

### 824. நீர்க்குளிரியின் பெயர்

கல்லாரம், நீர்க்குளிரி என்ப.

**நீர்க்குளிரியின் பெயர் (1)**

1. கல்லாரம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

1-2 கல்காரம், கல்லாரம்
கல்லாரநீர்க் குளிரியெனக் கருதுவர். (197)

### 825. தாமரையின் பெயர்

புண்டரிகம், நளினம், பதுமம், சரோருகம்,
முண்டகம், அம்போருகம், அரவிந்தம்,
பங்கயம், அம்புசம், வாரிசம், சலசம்,
கஞ்சம், வனசம், கோகனகம், கமலம்,
அம்புயம், முளரி, திருமால் கொப்பூழ்,
திருமலர், இண்டை, சதபத் திரிஎன
வருபவை தாமரை வண்பெயர் ஆகும்.

**தாமரையின் பெயர் (21)**

1. புண்டரிகம், 2. நளினம், 3. பதுமம், 4. சரோருகம், 5. முண்டகம், 6. அம்போருகம், 7. அரவிந்தம், 8. பங்கயம் 9. அம்புசம், 10, வாரிசம், 11. சலசம், 12. கஞ்சம், 13. வனசம், 14. கோகனகம், 15. கமலம், 16. அம்புயம், 17. முளரி, 18. திருமால் கொப்பூழ், 19. திருமலர், 20. இண்டை, 21. சதபத்திரி

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:1-3 புண்டரீகம் பதும நளினஞ்

3:2 அம்புதம், 4. பற்பம்

4:3 கோகனதம்

5:1-2 சலச முளரி, முளரி நீரோருகந்

6:3-4 சதபத் திரமென

இதனை அடுத்து முதற்பதிப்பாசிரியர் சேர்த்த இரு புது நூற்பாக்கள் வருமாறு :

தாமரைக்காயின் பெயர்,

43. * வராடகந் தாமரைக் காயென வகுப்பர்.

தாமரைச் சுருளின் பெயர்:

44. * சுருள்விசி வளையம்
சுருள்பீசம் என்பது பிற்பதிப்புக்கள்.

இதன் பின்னர் குவளைப் பொதுப்பெயர் என்னும் தலைப்பில்
'உற்பலங் குவலயங் கழுநீர் குவளை'

என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. எனினும் இது பல பிரதிகளிலும் இல்லை. (198)

## 826. கருங்குவளையின் பெயர்

நீலோற் பலம், இந் தீவரம், குவலயம்,
நீலம், பானல், காவி, கருங்குவளை.

**கருங்குவளையின் பெயர் (6)**

1. நீலோற்பலம், 2. இந்தீவரம், 3. குவலயம், 4. நீலம், 5. பானல், 6. காவி.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : நீலோற்பத்தின் பெயர்.

1:4 குவலையம்

இந்நூற்பாவின் 3-ஆம் அடியாக அச்சுப்பிரதியில் 'கல்லாரமுமெனக் கழற லாகும்' என்பது காணப்படுகிறது. இதற்குக் 'கல்ல காரமெனக் கழறவுமாகும்' என்னும் மாற்றுப் பாடமும் உளது. இவ்வடி ஏட்டுப்பிரதிகளில் இல்லை.

பிங்கலந்தை முதலியவற்றில் கருங்குவளையைக் கருநெய்தலெனவும், குமுதத்தை வெண்ணெய்தலெனவுங் கூறுவர்' என்பது முதற் பதிப்பாசிரியர் குறிப்பு. (199)

## 827. செங்கழுநீரின் பெயர்

செங்குவளை, அரத்தம், உற்பலம், செங்கழுநீர்.

**செங்கழுநீரின் பெயர் (3)**

1. செங்குவளை, 2. அரத்தம், 3. உற்பலம்



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : செங்குவளையின் பெயர். (200)

## 828. நெய்தலின் பெயர்

குவலயம், நெய்தல், ஆகவும் கூறுவர்.

**நெய்தலின் பெயர் (1)**

1. குவலயம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. குவலையம்
3-4 லாகக் கூறுவர், லாமெனக் கூறுவர். (201)

## 829. செவ்வல்லியின் பெயர்

கயிரவம் என்பது செவ்வல்லி ஆகும்.

**செவ்வல்லியின் பெயர் (1)**

1. கயிரவம்

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : செவ்வாம்பலின் பெயர்
கைரவஞ் செவ்வல்லி செவ்வாம்ப லாகும்-என்பது அச்சுப் பிரதி. (202)

## 830. குமுதம் என்னும் பெயர்

வெள்ளாம்பல், சேதாம்பல், என்று இரு விகற்பமும்
கொள்ப மன்னோ குமுதப் பெயரே.

குமுதம் என்னும் பெயர் :
வெள்ளாம்பலுக்கும் செவ்வாம்பலுக்கும் உரித்து.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:2 செவ்வாம்பல்

இதனோடு சேர,

'ஆம்பலு நெய்தலு மல்லியுங் குமுதம்.'

என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இதனை முன் நூற்பாவின் மூன்றாம் அடியாகவும், ஆம்பல் நெய்தல், அல்லிப்

பொதுப் பெயர் என்னும் தலைப்பில்; தனிநூற்பாவாகவும் ஒரு சில ஏடுகள் சுட்டியுள்ளன. பெரும்பான்மை ஏடுகளிலும் இந்நூற்பா இல்லை. (203)

### 831. அகவிதழின் பெயர்

அல்லி, அகவிதழ்.

**அகவிதழின் பெயர் (1)**

1. அல்லி (204)

### 832. புறவிதழின் பெயர்

புல்லி, புறவிதழ்

**புறவிதழின் பெயர் (1)**

1. புல்லி

**பாடவேறுபாடு—விளக்கம்**

1. புல்லிதழ்

அகவிதழுக்கும் புறவிதழுக்கும் பெயர் என்னும் தலைப்பில் 831, 832-ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (205)

### 833. பூவினுட் கொட்டையின் பெயர்

பொகுட்டே, பூவினுள் கொட்டை ஆகும்.

**பூவினுட் கொட்டையின் பெயர் (1)**

1. பொகுட்டு

**பாடவேறுபாடு—விளக்கம்**

பொகுட்டே கன்னிகை பூவினுட் கொட்டை. (206)

### 834. பூவகைப் பெயர்

கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ,
தோற்ற முடைய பூவின் தொடர்பே.

**பூவகைப் பெயர் (4)**

1. கோட்டுப்பூ, 2. கொடிப்பூ, 3. நீர்ப்பூ, 4. நிலப்பூ.



**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : பூவின் தோற்றத்தின் பெயர்,
நால்வகைப் பூத் தோற்றத்தின் பெயர். (207)

### 835. மொட்டின் பெயர்

முகை, நனை, கலிகை, முகிழ், சினை, கோரகம்,
நகை, கன்னிகை, போசில்: அரும்பு, மொட்டே.

**மொட்டின் பெயர் (10)**

1. முகை, 2. நனை, 3. கலிகை, 4. முகிழ், 5. சினை, 6. கோரகம், 7. நகை, 8. கன்னிகை, 9. போகில், 10. அரும்பு, (7 ஆவதான நகையென்பது அடைமொழியாகக் கொள்ளினும் அமையும் என்பர் முதற்பதிப்பாசிரியர்).

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அரும்பின் பெயர்.
1:2-3 கலிகை 3. முகுள், முகுளை, 4. கோரகை (208)

### 836. மலர்ந்த பூவின் பெயர்

அலர், தார், அலரி, போது, வீ, துணர்,
மலரோடு, இணர் இவை மலர்ந்த பூவே.

**மலர்ந்த பூவின் பெயர் (8)**

1. அலர், 2. தார், 3. அலரி, 4. போது, 5. வீ, 6. துணர், 7. மலர், 8. இணர்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

1—3—4 போதுசுமம் குசுமம், போது சுமனசம் குசுமம்— பிற்பதிப்புக்கள்.

2:1—2 மலரே யிணரிவை, மலரிணர் யாவும்.
2 இணரி, இணர்வீ.

இதன் பின்னர், பூங்கொத்தின் பெயர் என்னும் தலைப்பில்,

துணரே மஞ்சரி வல்லரி தொத்தோ
டிணரே குலையிவை பூங்கொத் தென்ப.

என ஒரு நூற்பா அச்சுப் பிரதியில் உள்ளது. இந்நூற்பா பல பிரதிகளிலும் இல்லை. (209)

## 837. வெற்றிப்பூவின் பெயர்

நல்இசை அம்பர்ச் செல்வச் சேந்தனின்.
வரைவுஇல் கல்வியில், படையில், கொடையில்.
வெல்லுநர் அணிவாகை வெற்றிப்பூவே.

**வெற்றிப்பூவின் பெயர் (1)**

1. வாகை. பெரும்புகழ் வாய்ந்த அம்பர் என்னும் ஊரில் வாழும் செல்வனாகிய சேந்தனைப் போல வரம்பில்லாத கல்வியிலும் படையிலும் கொடையிலும் வெற்றி பெறுவோர் அணியும் வெற்றிப்பூவின் பெயர் வாகை என்பதாம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வரம்பில்லாத கல்வியிலும் படையிலும் கொடையிலும் பிறரை வெல்லுநரணியும் வெற்றிப்பூவின் பெயர்.

1:2 அம்பற்.

2:1 வலியிற், வல்லிற் 2 நல்வாழ்விற், கல்வியிற் பல்.

திவாகரர் தம்மைப் பேணிப் போற்றிய அம்பர்த் தலைவன் சேந்தனை நூலுள்ளும் குறிப்பிட்டுச் சிறப்பிக்கும் இடங்களுள் இஃது ஒன்று. (210)

## 838. பழம்பூவின் பெயர்

செம்மல், பழம்பூ ஆகச் செப்புவர்.

**பழம்பூவின் பெயர் (1)**

செம்மல். (211)

## 839. மலர்த்தாதின் பெயர்

மகரந்தம், கேசரம், கொங்கு, மலர்த் தாதே.

**மலர்த்தாதின் பெயர் (3)**

1. மகரந்தம், 2. கேசரம், 3. கொங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பூந்தாதின் பெயர். (212)

## 840. பூவிதழின் பெயர்

ஏடும், தோடும், பூவின் இதழே.



**பூவிதழின் பெயர் (2)**

1. ஏடு, 2. தோடு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பூவினிதழின் பெயர். (213)

## 841. மாலையின் பெயர்

தொடையல், வாசிகை, சிகழிகை, கோதை,
படலை, அலங்கல், கத்திகை, பிணையல்,
அணியல், சுருக்கல், தொடலை, தாமம்,
தொங்கல், தெரியல், கண்ணி, தார், சூட்டு,
மஞ்சரி, ஒலியல், இலம்பகம், மாலை.

**மாலையின் பெயர் (20)**

1. தொடையல், 2. வாசிகை, 3. சிகழிகை, 4. கோதை 5. படலை, 6. அலங்கல், 7. கத்திகை, 8. பிணையல், 9. அணியல், 10. சுருக்கல், 11. தொடலை, 12. தாமம், 13. தொங்கல், 14. தெரியல், 15. கண்ணி, 16. தார், 17. சூட்டு, 18. மஞ்சரி, 19. ஒலியல், 20. இலம்பகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 சிகழி

2:3 பித்திகை

4:2 சுருக்கை

இதன்பின் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா:

பின்னிய மாலையின் பெயர்

45. * பிணையல் பின்னிய மாலைப் பெயரே. (214)

## 842. நுதல்மாலையின் பெயர்

சூட்டே, இலம்பகம்; சூழ் நுதல் மேல்அணி.

**நுதல்மாலையின் பெயர் (2)**

1. சூட்டு, 2. இலம்பகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நுதலணி மாலையின் பெயர்
சூட்டுட னிலம்பக நுதலணி மாலை. (215)

### 843. தொடையல் மாலையின் பெயர்

மாலை, சிகழிகை, வாசிகை, தொடையல்
ஆகும் என்ப அறிந்திசி னோரே.

**தொடையல் மாலையின் பெயர் (3)**

1. மாலை, 2. சிகழிகை, 8. வாசிகை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : தலையணி மாலையின் பெயர், வாசிகையின் பெயர். (216)

### 844. திவாகர வரலாறு

நாடே பிறர் நாட்டிற்கு உவமை ; யாறே
காலம் அறிந்து உதவும் காவிரிதானே;
ஆடவர் திலகன், அம்பர் மன்னன்,
நீடுஇசைத் தலைவன் அருவந்தைச் சேந்தன்
ஆய்ந்த திவாகரத்து அரும்பொருள் விளக்கும்
நான்காவது மரப்பெயர்த் தொகுதி முற்றும்.

**பாட வேறுபாடு—விளக்கம்**

1:1-8 நாடேபிற நாட் டுக் குவமை

2:8 காவேரி

8:2 திலகம், 3-4 அம்பன் மன்னன்

4:3-4 சேந்த னருவந்தை. (217)

**ஐந்தாவது**

# இடப்பெயர்த் தொகுதி

# திவாகரம்

## முதல் தொகுதி

பதிப்பாசிரியர்
மு. சண்முகம் பிள்ளை
இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்
1990

திவாகரம் (முதல் தொகுதி)
A Critical Edition of Tivakara Nikantu (Volume-I)

முதல் பதிப்பு 1990

விலை ரூ. 75-00

பக்கங்கள் (64+518 : 582)

நூல்கள் கிடைக்குமிடம்
இயக்குநர்
பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

ஜனசக்தி அச்சகம்
சென்னை,

# திவாகரம்

## முதல் தொகுதி

# திவாகரம்

## முதல் தொகுதி

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | V |
| | முன்னுரை | IX—LXIV |
| 1. | தெய்வப் பெயர்த் தொகுதி | 1—60 |
| 2. | மக்கட் பெயர்த் தொகுதி | 61—134 |
| 3. | விலங்கின் பெயர்த் தொகுதி | 135—200 |
| 4. | மரப் பெயர்த் தொகுதி | 201—264 |
| 5. | இடப் பெயர்த் தொகுதி | 2 5—330 |
| 6. | பல்பொருட் பெயர்த் தொகுதி | 331—366 |
| 7. | செயற்கை வடிவின் பெயர்த் தொகுதி | 367—440 |
| 8. | பண்பு பற்றிய பெயர்த் தொகுதி | 441—518 |

## பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையிடம் ஆய்வுப் பயிற்சி பெற்றவர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் அன்பிற்கும் நல்வாழ்த்திற்கும் உரியவர். சென்னை, மதுரை, தஞ்சை முதலாய பல்கலைக் கழகங்களிலும் தமிழ்நாடு அரசு கலைக் கல்லூரிகளிலும் தமிழ் வளர்ச்சித் துறையிலும் பணியாற்றிய பேராசிரியர். நூற்றிற்கும் மேற்பட்ட நூல்களின் பதிப்பாசிரியர். தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடியியல் துறையின் தலைவராயும், புலத்தலைவராயும் பணியாற்றியவர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் திருக்குறள் துறையில் பணியாற்றும்போது பல நூல் களைப் படைத்தவர். தமிழாய்வின் பன்னிரு தொகுதிகட்கும் பதிப்பாசிரியராய் விளங்கியவர். பல்வேறு உயர் ஆய்வு நிறுவனங் களிலும் பேருரையாற்றியவர். கம்பன் கழக விருதினையும் பாராட் டையும் பெற்றவர். ஜைன இளைஞர் மன்றத்தாரால் 'பதிப்புச் செம்மல்' எனப் பாராட்டப் பெற்றவர். பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நினைவு மன்றத்தை 1987 இல் தொடங்கி அதன் செய லாளராயும் பதிப்பாசிரியராயும் பணியாற்றி வருபவர். எழுபது வயதிலும் இளைஞராய்ப் பணியாற்றும் இவர் இப்பொழுது ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் சுவடித்துறைத் தலைவராய்ப் பணியாற்றுகின்றார்.

## டாக்டர் இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் 1969 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருபவர். பல்கலைக் கழக வாயிலாகப் பல நூல்களை வெளியிட்டும் பதிப்பித்தும் வருகின்றார். நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளையும் நாற்பதிற்கு மேற்பட்ட நூல்களை யும் வெளியிட்டுள்ளார். திருக்குறள் ஆராய்ச்சித்துறையின் வாயி லாகத் திருக்குறள் அணி நலம் என்னும் நூலையும் வெளியிட் டுள்ளார். திருக்குறள் ஆய்வுப் பணிக்காகத் தமிழ் நாடு அரசால் விருதும் பாராட்டும் பெற்றவர். சுவடியியல், பதிப்பியல், மானிட வியல், அகராதியியல் முதலாய துறைகளில் பயிற்சியும் ஈடுபாடும் உள்ளவர். தமிழ் நடையியல் குறித்துப் பல நூல்களை வெளியிட் டுள்ளார். முப்பது ஆண்டுகட்கு மேலாக ஆசிரிய அனுபவமும் இருபது ஆண்டுகட்கு மேல் ஆராய்ச்சி அனுபவமும் வாய்க்கப் பெற்ற இவர் 13 பி எச்.டி, 24 எம்.பில் ஆய்வு மாணவர்களை உரு வாக்கியுள்ளார். பல்வேறு உயர் ஆய்வு நிறுவனங்களிலும், பல் கலைக்கழகங்களிலும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் பேரு ரைகளும் ஆற்றியவர். யு.ஜி.ஸி. நிதியுதவியோடு 'தமிழிலக்கியத் தில் மானிடவியல்' என்னும் பொருள் பற்றிச் சிறப்பாய்வு நிகழ்த்தி யுள்ளார். இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகின்றார்.

# திவாகரம்

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்

மு. சண்முகம் பிள்ளை

இ. சுந்தரமூர்த்தி